203—

வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***8180—திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) செங்கம் வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் 1–4–1929 அன்று கட்டப்பட்ட 92 வருட பாரம்பரியமிக்க மிகப் பழமையான கட்டடமாகும். இக்கட்டடத்துடன் கிளைச் சிறை மற்றும் சார் கருவூலம் உட்பட சில அலுவலகங்களும் இணைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. மேற்படி, வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்திற்கு வருடந்தோறும் சிறப்புப் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், இக்கட்டடமானது மிகவும் பழமையான, தொன்மையான கட்டடம். அதனால், இதனை இடிக்க இயலாது. மேலும், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் புதிய கட்டடம் கட்ட தேவையான இடவசதி இல்லாத காரணத்தால், புதிய கட்டடம் கட்ட வேறு ஒரு பணித் தளம் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரால் தேர்வு செய்யப்பட்டு, பொதுப் பணித் துறை மற்றும் முதன்மைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அரசுக்குக் கிடைக்கும்பட்சத்தில், புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டம் என்பது பெரிய வட்டமாகும். அதுவும்*

2022 ஏப்ரல் 29]

பழமையான வட்டம். செங்கம் நகரப் பகுதியில் மக்கள் நெருக்கடி அதிகமாக இருக்கின்றது. காலை 9 மணி முதல் மாலை வரையிலும் அரசு அலுவலக நேரங்களிலே ஒரு மணி நேரத்திற்குமேல் அங்கே போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவிடுகிறது. அங்கே கட்டடம் கட்டுவதற்கு இடம் தேர்வு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே வருவாய்த் துறையின் மூலமாக இடம் தேர்வு செய்யப்பட்டதாக அறிகிறேன். அந்த இடத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் ஆலோசனையோடு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கருத்துரு தயார் செய்து அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறோம். எனவே, இந்த ஆண்டே அதைச் செய்து தருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டுவதற்காக துக்காப்பேட்டை கிராமத்தில் புல எண் 64/4, 0.29.13 ஹெக்டேர் சர்க்கார் புறம்போக்கு இடம் தேர்வு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த இடத்திலே கட்டடம் கட்டுவதற்கான பணிகளை விரைவுபடுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமென்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துக்காப்பேட்டையிலே இடம் பார்த்ததாகச் சொன்னார்கள். இப்போது இருக்கின்ற இடமே, பெரிய இடமாக இருக்கின்றது. அருகிலே பழைய காவல் நிலையம் இருந்தது. துக்காப்பேட்டையில் அந்தக் காவல் நிலையம் புதியதாக அமைக்கப்பட்டுவிட்டது;*

நீதிமன்றமும் தனியாகக் கட்டப்பட்டுவிட்டது; அந்த வளாகத்திற்குள்ளே இருக்கின்ற பத்திரப் பதிவு அலுவலகத்திற்கும் புதிய இடம் தேர்வு செய்யப்பட்டுவிட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இடம் இல்லையென்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். இடத்தைத் தேர்வு செய்து கொடுங்கள்.

திரு. மு.பெ. கிரி: ஒருங்கிணைந்து இருந்த அலுவலகங்களெல்லாம் வெளியிடத்திற்குச் சென்றுவிட்டன. பெரிய நிலப்பரப்பு அங்கே காலியாக இருக்கும். எனவே, அதே இடத்தில்கூட கட்டுவதற்கு வாய்ப்பிருக்கிறது. எனவே, அங்கேயே கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டடம், ஏறத்தாழ 90 வருடங்களுக்கு மேலான தொன்மையான கட்டடமாக இருக்கிறது. ஆகவேதான், அதை இடிப்பதற்குப் பதிலாக, வேறு இடம் பார்க்கலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கோரிக்கையும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லி, பரிசீலித்து, அப்படிச் செய்ய முடியும் என்று சொன்னால் நிச்சயமாக அதைச் செய்து கொடுக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.

திரு. S. ராஜகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை தாலுகா அலுவலகம், 100 ஆண்டுகள் பழமையான ஓர் ஓட்டுக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. மயிலாடுதுறை மாவட்டம், இப்போது 38—வது மாவட்டமாக புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, புதிய தாலுகா அலுவலகம் கட்டுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2022 ஏப்ரல் 29]

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய அந்த யோசனையை நான் பரிசீலித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்குரிய தகுதி இருக்குமென்று சொன்னால், நிச்சயமாகச் செய்து கொடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள்.*

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். வட்டாட்சியர் அலுவலகம் புதியதாகக் கட்டுகின்றபோது, வட்டாட்சியர் அலுவலகம் மட்டும்தான் கட்டப்படுகிறது. சுற்றுச் சுவர் கட்டப்படுவதில்லை. மதிப்பீடுகள் தயாரித்து கட்டப்படுவதில்லை. சுற்றுச் சுவர் இல்லாத காரணத்தினால் கால்நடைகள் அங்கே சென்று படுத்துக்கொண்டு, அசுத்தம் செய்வதால் அவற்றைச் சுத்தம் செய்வது கடினமாக இருக்கிறது. ஆகவே, அனைத்து இடங்களிலும் சுற்றுச் சுவர்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்கள் சொன்னது நல்ல யோசனை, அதை அரசு பரிசீலித்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ. ராஜா அவர்கள்.*

திரு. ஈ. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கரன்கோவில் தொகுதி, திருவேங்கடம் தாலுகாவில், வட்டாட்சியர் அலுவலகம் எப்போது திறந்துவைக்கப்படும் எனத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. K.K.S.S.R. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையைப் பரிசீலித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 204, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன், மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

204—

கால்நடை மருந்தகம்

***4476—திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கும்மிடிப்பூண்டி தொகுதி, பாகல்மேடு ஊராட்சியில் கால்நடை மருந்தகம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஜெ. கோவிந்தராஜன் அவர்கள்.

திரு. டி.ஜெ. கோவிந்தராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.”

ஒற்றர்கள்மூலம் நாட்டில் நிகழக்கூடிய நிகழ்வுகளை அறிந்து, ஆட்சியைச் செய்கின்ற மன்னவன் அந்த ஆட்சியை சிறப்பிப்பான். அதேபோல, இன்று தமிழகத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுத் துறை அதிகாரிகள், ஆலோசகர்கள் என இன்று ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதல்வர் ஆயுட்காலம் வரையில் தமிழகத்தின் முதல்வராக, வழி நடத்த இருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு (மேசையைத்